# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/63 - 2020 ජනවාරි මස 25 වැනි සෙනසුරාදා - 2020.01.25

*2159/63 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழான அறிவித்தல்**

கடந்த அண்மைக் காலத்தின்போது பயங்கரவாதப் போராளிகளின் அல்லது வேறு குழுக்களின் நடவடிக்கைகள் காரணமாக சில ஆட்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களாக உள்ளார்களாதலாலும்,

2. 2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய,

2.1 உள்நாட்டு ரீதியாக இடம்பெயர்ந்துள்ள அல்லது இடம்பெயர்ந்திருந்த ஒருவரும்,

2.2 2009 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஏதேனும் ஒரு ஆண்டிற்கு ஏதேனும் ஒரு தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பொன்றில் பெயர் உட்சேர்க்கப்பட்ட ஒருவரும்,

2.3 2009 ஆம் ஆண்டின் பின்னர் செல்லுபடியாகக் காணப்பட்ட எந்தவொரு வாக்காளர் இடாப்பிலும் தனது பெயரை உட்சேர்க்காதவரும்,

என்ற விடயங்கள் குறிப்பாக நிரூபிக்கப்படுவதன் மூலம், விண்ணப்பதாரி உள்நாட்டு ரீதியாக இடம்பெயர்ந்தவரொருவரென தற்போது வதிந்துள்ள பிரிவின் கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், 2009, மே மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் நிரந்தரமாக வதிவைக் கொண்டிருந்த தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் பெயரை பதிவு செய்து கொள்வதற்காக உரிய தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலரிடம் கோருவதற்கு மேற்குறித்த சட்டத்தின் மூலம் உரித்துரிமை வழங்கப்பட்டுள்ளமையாலும்,


1A - G 31861 — 67 (2020/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. மேற்குறித்த விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 2(3) ஆம் பிரிவிற்கமைய மேலேயுள்ள இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பிரசையொருவரின் பிள்ளைகளான,

3.1 உள்நாட்டில் இடம்பெயர்ந்த திகதியன்று 18 வயதை எய்தியிராதவரும் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்புத் தொடர்பிலான மீளாய்வு எத்திகதியன்று தொடங்கியதோ அத்திகதியன்று 18 வயதை அல்லது அதனிலும் கூடிய வயதை எய்தியுள்ளவர்களும்,

3.2 அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்தவரொருவரானதன் பின்னர் பிறந்து விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்புத் தொடர்பிலான மீளாய்வு எத்திகதியன்று தொடங்கியதோ அத்திகதியன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களும்,

3.3 2009 ஆம் ஆண்டின் பின்னர் நடைமுறையிலிருந்த ஏதேனும் இடாப்பில் தமது பெயர்கள் பதிவு செய்யப்பட்டிராதவருமான,

நபர்கள் தமது பிறப்புச் சான்றிதழ்களையும் கிராம அலுவலரினால் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்பட்ட சான்றிதழொன்றையும் சமர்ப்பிப்பதன் மூலம் 2009 மே மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் தான் அல்லது தனது பெற்றோர் இடம்பெயர்ந்த ஒருவராவதற்கு முன்னர் நிரந்தரமாக வதிவைக் கொண்டிருந்த தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலருக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான உரித்துரிமை வழங்கப்பட்டுள்ளமையாலும்,

4. 2017 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய, மேற்குறித்த 02 மற்றும் 03 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களின் பெயர்களை உள்ளடக்கிய 2019 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு வாக்காளர் இடாப்பொன்றைத் தயாரிப்பதற்கான விண்ணப்பங்களைக் கையேற்றல் 2020 சனவரி மாதம் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 சனவரி மாதம் 31 ஆந் திகதி முடிவடைகின்றதெனவும், உரிய விண்ணப்பப்படிவங்களை நாடெங்கிலுமுள்ள அனைத்துத் தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும், முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களைக் குறித்த பதிவு அலுவலர்களுக்குச் சமர்ப்பிக்குமாறும் இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

5. மேலே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைநிரப்பு வாக்காளர் இடாப்பைத் தயாரித்தல் 2020 பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு அது பற்றிய அறிவித்தலை 2020 பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதியன்றே வெளியிட எதிர்பார்ப்பதாகவும், அப்பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்படாத மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு தத்தம் பெயர்களைக் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்காக மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்கு அத்திகதியிலிருந்து 14 நாட்கள் மேலதிக காலப்பகுதியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020 சனவரி 20.

02-114

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.